Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

19.04.2020 ஞாயிற்றுக்கிழமை

## கொரோனா சந்தேக நபர் மடக்கிப்பிடிப்பு

கொழும்பு, ஏப். 19
சிலாபம் மருத்துவம னையில் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்க லாம் என்ற சந்தேகத்தில் பக்.2



# மக்களால் சுதந்திரமாக வாக்களிக்க முடியுமா?

### சந்தேகிக்கிறார் மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, ஏப். 19
தற்போதைய நிலையில் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலை இன்னும் மூன்று மாதங்களில் கூட நடத்த முடியுமா? என்ற பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று பரவுவதால் சுதந்திரமாக மக்களால் வாக்களிக்க முடியுமா? என்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு மாற்றுத் தீர்வைக் காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு நாளை கூட்டத்தைக் கூட்டுகின்றேன். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். பக்.2


## அத்தியாவசிய பொருள்கள் போதுமானளவு கையிருப்பில்

### உணவுத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 19
நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக உணவு திணைக்களம் அறிவித்துள்ளது. அரிசி, பருப்பு, ரின் மீன் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களைப் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக உண வுத் திணைக்களத்தின் ஆணையாளர் பக்.2

## சிப்பாய்க்கு கொரோனா! 200 பேருக்கு தொற்று?

கொழும்பு, ஏப். 19
அனுராதபுரத்தில் உள்ள இராணுவத்தின் பொறியியல் படைப்பிரிவில் பணியாற்றும் சிப்பாய் ஒருவர் விடுமுறைக்காக வீடு திரும்பிய நிலையில் கொரோனா பக்.2



## இன்று மட்டும் 15 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஏப்.19
இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 15 பேர் இன்று அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள் ளது. இதையடுத்து தொற்றுக் குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 269 ஆக அதிகரித்துள்ளது. பக்.2

## கட்டுப்பாடுகளை மீற வேண்டாம்

### ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு,ஏப்.19
கொரோனா வைரஸ் சவால்களுக்கு மத்தியில் நாளை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும், கட்டுப்பாடு களை மீற வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ மக்களிடம் கோரிக்கை விடுத்துள் ளார். இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது. பக்.2

## ஊரடங்கு தளர்வின் பின் பின்பற்ற வேண்டியவை

### சுற்றறிக்கையை வெளியிட்டார் பீ.பி. ஜயசுந்தர

கொழும்பு, ஏப்.19
ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட வேளை யில், பொது நிறுவனங்களின் இயல்பான செயல்பாட்டை முன்னெடுக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டுதல்களுடன் கூடிய சுற்றறிக்கை ஒன்றை ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர வெளியிட்டுள்ளார். அதற்கமைய அமைச்சகங்களின் செயலாளர்கள், மாகாண தலைமைச் செயலாளர்கள், துறைசார் தலைவர் பக்.2

## சலூன்களுக்கு கட்டுப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 19
26 நாள்களின் பின்னர் ஊரடங்கு தளர்த்தப்படுவதன் காரணமாக பெருமளவானோர் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு வரக் கூடும் என்பதால், வடக்கு மாகாண பக்.2A

## வங்கிகள், திணைக்களங்களில் நாளை வழமையான செயற்பாடு

### ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவிப்பு

கொழும்பு, ஏப்.19
ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் திணைக் களங்கள், வங்கிகள் மற்றும் அரச நிறுவனங்கள் வழமையான கடமைகளை முன் னெடுக்க வேண்டும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. "கொழும்பு மாவட்டத்தில் உள்ள அரச நிறுவ னங்களில் கடமை பக்.2

### கொரோனாவிலிருந்து மீண்ட

## யாழ்ப்பாணத்தவர்கள் 4 பேர் இன்று வீடு திரும்பவுள்ளனர்

யாழ்ப்பாணம், ஏப். 19
பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிப்பிலிருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வெலிகந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நால்வர், முழுமையாகக் குணமடைந்து இன்று வீடு திரும்ப பக்.2A

## மதுபான நிலையங்கள் திறப்பதற்கு அனுமதி

கொழும்பு, ஏப். 19
சில்லறை மதுபான விற்பனைக்காக மதுவரித் திணைக் களத்தின் உரிமங்கள் பெற்ற மதுபான நிலை யங்கள் ஊரடங்கு தளர்த்தப்படும் கால எல்லைக்குள் சுகாதார அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்பட்டு பக்.2A

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# மக்களால் சுதந்திரமாக...

தேர்தலை விரைவில் நடத்துவதாக இருந்தால்
அதன் செலவினம் மூன்று மடங்காக அதிகரிக்கும்
என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே பொதுத் தேர்தலை நடத்துவதற்கு 750
கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்படு
கின்றது. இந்த நிலையில் தற்போது கொரோனா
தொற்றிலிருந்து விடுபடுவதற்கான அவசர நடவ
டிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் செயற்பா
டுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால்
இந்தத் தொகை 2 ஆயிரத்து 500 கோடி ரூபாவை
யும் தாண்டலாம் எனவும் அவர்
குறிப்பிட்டுள்ளார்.

ஊரடங்குச் சட்டம் முழுமையாக எடுக்கப்படா
மல் இருப்பதால் தேர்தலை உடனடியாக நடத்து
வது அசௌகரியமான காரியங்களை
சுட்டிக்காட்டியுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு
வின் தலைவர், இதனை அரசு எவ்வாறு கையா
ளப்போகின்றது என்பதை அறிந்து கொள்ளும்
பொருட்டு நாளை கூட்டத்தைக் கூட்டுவதாகக்
கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தின் கீழ் மார்ச்
மாதம் முதலாம் திகதி கலைக்கப்பட்ட நாடாளு
மன்றம் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி தேர்தல்
நடத்துவதற்கான அறிவித்தல் வர்த்தமானி மூலம்
பிரகடனப்படுத்தப்பட்டது. என்றாலும்கூட
வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட இறுதி
நாளன்று நாட்டின் நிலைமையைக் கருத்தில்
கொண்டு தேர்தலை ஒத்திவைப்பதற்குத்
தீர்மானித்தோம். ஏப்ரல் மாதம் 25ஆம் திகதிக்கும்
30 ஆம் திகதிக்கும் இடையில் மீண்டும் கூடி
இறுதி முடிவொன்றை எடுக்க எண்ணி இருப்பதா
கவும் தெரிவித்தி ருந்தோம்.

ஆனால், தற்போதைய நிலையில் தேர்தலை
இன்னும் மூன்று மாதங்களில் கூட நடத்த முடி
யுமா? என்ற பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
கொரோனா தொற்று பரவுவதால் சுதந்திரமாக
மக்களால் வாக்களிக்க முடியுமா? என்ற ஒரு
சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது. அதேவேளை,
தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும்
நெருக்கடி நிலை காணப்படுகிறது. வாக்களிப்பு
நிலையங்களில் மக்களைத் திரட்டுவதிலும்
அதிகாரிகள் கடமைகளை முன்னெடுப்பதிலும்
நெருக்கடியான நிலை அதிகமாகக் காணப்படுவ
தால் இதற்கு மாற்றுத் தீர்வைக் காண வேண்டிய
அவசியம் ஏற்பட்டுள்ளது.

நாளைய கூட்டத்தில் ஆராயப்படும் விடயங்கள்
தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தி
அவருடைய கருத்தையும் கேட்டறியத் தீர்மா
னித்திருக்கிறேன்.

அடுத்தகட்டமாக கட்சித் தலைவர்களையும்
அழைத்து அவர்களுடன் இவ்விடயமாகக் கலந்து
ரையாட இருக்கின்றேன். இந்தத் தேர்தல் நாட்
டின் முக்கியமான தேர்தலாகும். இந்தத் தேர்தலை
நாம் எப்படி நடத்தி முடிப்பது என்பது தொடர்
பில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டி
ருக்கின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்
படாவிட்டால் அதற்குரிய மாற்று நடவடிக்கை
என்ன? அது குறித்து சட்டத்தில் இதுவரையில்
எத்தகைய வியாக்கியானம் காணப்படாமையி
னால் புதிய வியாக்கியா னங்களை உள்ளடக்கிய
சட்டத் திருத்தம் ஒன்று நாடாளுமன்றத்தில்
நிறைவேற்றப்பட வேண்டும். அதனை எவ்வாறு
செய்வது என்பது குறித்தும் நாங்கள் ஜனாதிபதியு
டன் கலந்துரையாட இருக்கின்றோம்.

தேர்தலை இரண்டு, மூன்று கட்டங்களாக நடத்து
வதற்குரிய வியாக்கியானம் எதுவும் அரசமைப்பில்
காணப்படவில்லை. என்றாலும்கூட ஜனாதிபதி
யால் தேர்தல் திகதி அறிவிக்கப்படும்போது
ஒன்றுக்கு மேற்பட்ட திகதிகளை அறிவித்திருந்
தால் அதனைக் கவனத்தில் எடுத்து செயற்பட்டி
ருக்க முடியும். ஆனால், அவர் ஒரே
திகதியைத்தான் அறிவித்திருக்கின்றார். இந்தநிலை
யில் திகதிகளில் மாற்றம் ஏற்பட வேண்டுமென்
றால் அது குறித்து ஜனாதிபதி உயர்நீதிமன்றத்தின்
வியாக்கியா னத்தைக் கோர வேண்டும். அல்லது
நாடாளு மன்றத்தைக் கூட்டி சட்டத்தை நிறை
வேற்றிக்கொள்ள வேண்டும். அதற்குரிய அதிகா
ரம் ஜனாதிபதியையே சார்ந்திருக்கின்றது.

அதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலுக்கான
வேட்புமனுக்கள் எவ்வளவு காலத்துக்குச் செல்லு
படியாகும் என்ற வியாக்கியானமும் யாப்பில்
இல்லை. நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான
திகதி ஜூன் மாதம் 2 ஆம் திகதியுடன் காலாவதி
ஆவதால் அடுத்தகட்டமாக நாங்கள் உயர்
நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை நாட வேண்டி
யுள்ளது என்றாலும் ஒரு வேட்புமனுவும் இல்லா
மல் செய்யப்பட முடியாது. அப்படிச் செய்ய
வேண்டுமாக இருந்தால் சட்டத்தில் திருத்தம்
கொண்டுவரப்பட வேண்டும்.

இந்தத் தேர்தலை நடத்துவதாக இருந்தால்
ஏற்படக்கூடிய செலவினங்கள் பற்றி முக்கியமாகக்
கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். நாட்டின்
பொருளாதாரம் ஓர் அளவுக்கு முடங்கிப் போயுள்
ளது. இந்த நிலையில் தேர்தலை நடத்துவதற்குத்
தீர்மானிக்கப்பட்ட 750 கோடி ரூபா மூன்று
மடங்காக அதிகரிக்கும் நிலையே காணப்படு
கின்றது.

இவ்வளவுக்கும் மத்தியிலும் தேர்தலை நடத்துவ
தாக இருந்தால் செலவினம் மூன்று மடங்காக
அதிகரிக்கும். எப்படியும் 2 ஆயிரத்து 500 கோடி
ரூபாவைத் தாண்டும் என்று நாங்கள் கருத்தில்
கொள்ள வேண்டியுள்ளது.

உரிய தேர்தல் திகதியொன்றை ஜனாதிபதி அறி
வித்தால் அதற்குரிய சாத்தியக்கூறுகள் உயர்நீதி
மன்றத்தின் மூலம் உத்தரவாதப்படுத்தபட்டால்
தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் தயாராக
இருக்கின்றோம். உயர்நீதிமன்றத்தின் வியாக்கி
யானத்தைப் பெறாமல் திடுதிப்பென்று தேர்தலை
நடத்துவது சாத்தியமான ஒன்றல்ல.

நாங்கள் நாளைய கூட்டத்தில் அதிகாரிகளுக்குத்
தெளிவுபடுத்துவோம். அவர்களுடன் எட்டப்ப
டக் கூடிய ஆலோசனைகள், அறிவுறுத்தல்களை
பெற்றுக்கொண்டு அதனை ஜனாதிபதியிடம்
எடுத்துரைத்து அவரது முடிவைக் கோருவோம்.
அதன் பின்னரே எமது செயற்பாடுகள் எவ்வாறு
அமையும் என்பதை எம்மால் கூற முடியும் என்
றார். (ஒ,5,22)

# அத்தியாவசிய பொருள்கள்..

நாயகம் ஜே.கிருஸ்ணமூர்த்தி குறிப்பிட்டார்.
லங்கா சதொச, கூட்டுறவு விற்பனை நிலையங்கள்
ஆகியவற்றினூடாக உணவுப் பொருள்களை மக்க
ளுக்கு விநியோகிக்க உள்ளதாக அவர் கூறினார்.
இதேவேளை, மாவட்டச் செயலர்கள் மற்றும்
பிரதேச செயலர்களூடாக நிவாரண விலையில்
குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு
அத்தியாவசியப் பொருள்களை பகிர்ந்தளிக்கும்
செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் காணப்படும் மொத்தக் களஞ்சியத்தை
ஆராய்ந்து தேவையான அளவு உணவுப் பொருள்
களை இறக்குமதி செய்ய, தூதுவராலயங்களூடாக
இணைப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட
வுள்ளன.

மாதமொன்றுக்கு இரண்டு இலட்சம் மெட்ரிக்
தொன் அரிசி தேவைப்படுவதாக உணவு திணைக்க
ளத்தின் ஆணையாளர் நாயகம் ஜே.கிருஸ்ணமூர்த்தி
குறிப்பிட்டார். நெல் அறுவடையின் பின்னர்,
தேவையை பூர்த்தி செய்வதில் எவ்வித சிக்கலும்
ஏற்படாது என அவர் சுட்டிக்காட்டினார். (ஒ,5)

# சிப்பாய்க்கு...

பாதிப்புக்குள்ளாகி உள்ளார். இவர் கொழும்பு
ஐ.டி.எச் மருத்துவமனையில் சேர்க்கப்பட்
டுள்ளார்.

சுமார் 200 பேரிடம் அவர் பழகியுள்ளதாகவும்,
இதனால் அவர்களுக்கும் கொரோனாத்
தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாகவும்,
எனவே அவர்க்ள் தொடர்பில் விசாரணைகள்
இடம்பெறுவதாகவும் கூறப்படுகிறது. சிப்பாய்
தங்கியிருந்த அவிசாவளை, கஹாஹேன
பகுதியிலும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை
முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

# ஊரடங்கு தளர்வின்...

கள், பிரதேச செயலாளர்கள், கூட்டுதாபன
தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்க
ளின் பொது முகாமையாளர்களுக்காகவே
சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வேலைத்தளங்களில் கொவிட் 19 வைரஸ் பரவுவ
தைக் கட்டுப்படுத்தவும், பணியாளர்கள்
வேலைக்கு வருவதற்கான வழிமுறையாகவும்,
மக்கள் கூட்டமாக ஒன்று கூடுவதை தடுக்கவும்,
வீட்டிலிருந்து தங்கள் கடமைகளைச் செய்யவும்
நான்கு முக்கிய விடயங்களை உள்ளடக்கி இந்த
சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அனைத்து
அரசு நிறுவனங்களும் சமூக இடைவெளி, முகம்
கழுவுதல், கை கழுவுதல் மற்றும் பிற சுகாதார
நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்
டும் எனவும் அதேபோல் சேவை பெற வரும்
பொதுமக்களின் கைகளை சுத்தம் செய்வதற்கான
வசதிகளை வழங்க வேண்டும். அனைத்து வகை
யான திருவிழாக்கள், யாத்திரை, சுற்றுலாக்கள்,
ஊர்வலங்கள், கூட்டங்கள் போன்றவை மீள
அறிவிக்கும் வரை தடை செய்யவும் அரசாங்கம்
தீர்மானித்துள்ளது. மேலும் மக்கள் கூட்டமாக
கூடுவதால் அது வைரஸ் பரவலைத் தடுக்க
தடையாக இருக்கும் என கருதி அனைத்து மத
விழாக்களுக்கும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக
அரசாங்கம் அறிவித்துள்ளது. கொரோனா
வைரஸ் பரவல் இன்னும் முழுமையாக கட்டுப்ப
டுத்தவில்லை என்பதால், ஜனாதிபதியின் ஊடகப்
பிரிவு அனைவரையும் அனைத்து சுகாதார
விதிமுறைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்
என்றும், பொறுப்புடன் நடக்க வேண்டும்
என்றும், ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும்
போது பணிகளுக்காக வெளியில் செல்லுமாறும்
அதனைத் தவிர வேறு தேவைக்காக வெளியில்
நடமாடுவதை தவிர்க்குமாறும் முடியுமான வரை
வீட்டிலேயே இருக்குமாறும் கேட்டுள்ளது.

இதேவேளை சமூகத்தில் கொவிட் 19 வைரஸ்
பரவுவது குறைவடைத்துள்ளதால் நாட்டில் உள்ள
மக்களின் அன்றாட வாழ்க்கையை மீட்டெடுக்க
நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார
அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி கூறுகிறார்.
ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்ட பிறகும், சுகாதார
அதிகாரிகள் அளித்த வழிகாட்டுதல்களை பொது
மக்கள் பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும்
என சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர்
பபா பலிஹவடன தெரிவித்துள்ளார். (ப)

# கொரோனா சந்தேக நபர்...

சேர்க்கப்பட்டவர் மருத்தும
னையிலிருந்து தப்பியோடி
னார். அவரைப் பொதுச்
சுகாதார அதிகாரிகளும்,
பொலிஸாரும் இணைந்து
நேற்று மாலை மடக்கிப்
பிடித்தனர். சிலாபம் பகுதி
யைச் சேர்ந்த 30 வயதுடைய
சந்தேகநபர், போதைப்
பொருள் பாவனையில் ஈடுபட்
டவரென, பொலிஸார் தெரி
வித்தனர். அவர் கொழும்பு
நாகலகம் பகுதியில் மக்கள்
தனிமைப்படுத்தலுக்கு உட்ப
டுத்தப்பட்டபோது, அங்கிருந்து
தப்பிச் சென்றவர் எனவும்
தெரிவிக்கப்படுகிறது. (ஒ,5)

# வங்கிகள்....

யாற்றும் ஊழியர்களில் மூன்றில் ஒரு
பகுதியினர் பணிக்கு சமூகமளிக்க வேண்
டும். நாட்டின் ஏனைய மாவட்டங்களில்
உள்ள அரச நிறுவனங்களில் கடமையாற்
றும் ஊழியர்களில் ஐம்பது சதவீதமானோர்
கடமைக்கு திரும்ப வேண்டும். ஏனையவர்
கள் வீட்டிலி ருந்து வேலை செய்ய முடி
யும் என்பதோடு யாரை வேலைக்கு
அழைக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும்
பொறுப்பு நிறுவன உயரதிகாரியிடமே
உள்ளது. ஊழியர்களுக்கு தேவையான
வசதிகளை பெற்றுக்கொடுப்பது அந்த
நிறுவன உயர திகாரியின் பொறுப்பாகும்.
அதேபோல் தனியார் நிறுவனங்கள் காலை
10 மணிக்கு திறக்கப்பட வேண்டும்.
மேலும் நிறுவனங்களின் தலைவர்கள்
பணியாளர்களின் எண்ணிக்கையை
தீர்மானிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்
பட்டுள்ளது” என ஜனாதிபதியின் ஊடகப்
பிரிவு தெரிவித்தது. (ப)

# இன்று மட்டும் 15 பேருக்கு...

அதேவேளை, மேலும் ஐவர்
குணமடைந்து இன்று வீடு
திரும்பியுள்ளனர். அதற்க
மைய பூரண குணமடைந்த
வர்களின் எண்ணிக்கை
91 ஆக உயர்ந்துள்ளது.
இதுவரை 7 பேர் உயிரிழந்
துள்ள நிலையில், 170 பேர்
வைத்தியசாலைகளில்
சிகிச்சை பெற்று வருகின்ற
னர். மேலும் 122 பேர்
கொரோனா தொற்றுச்
சந்தேகத்தில் வைத்தியசா
லைகளில் கண்காணிப்பில்
வைக்கப்பட்டுள்ளனர் என்று
சுகாதார அமைச்சு மேலும்
தெரிவித்துள்ளது. (22)

# சலூன்களுக்கு....

சுகாதார சேவைகள் பணிமனையால் பல்வேறு இறுக்கமான கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பில் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனால், வடக்கின் 5 மாவட்டச் செயலர்களுக்கும் சிறப்பு அறிவித்தல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நீண்ட நாள்களாக நடைமுறையிலிருந்த ஊரடங்கு தளர்த்தப்படஉள்ளதால் பெருமளவானோர் சிகை அலங்கரிப்பு நிலையங்களை (சலூன்களை) அணுகவுள்ளனர். இது ஒரு ஆபத்தான நிலையாகும்.
கொரோனா தொற்று ஆபத்துக்களை தவிர்ப்பதற்காக பின்வரும் நடைமுறைகளை நடைமுறைப்படுத்துமாறு தங்களது பிரதேச செயலர்களூடாக சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.
சலூன்களுக்குள் இருவருக்கிடையில் ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணவும்.
முடி திருத்துநர்கள் கட்டாயமாக முகக் கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.
முடி திருத்துநர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளருக்குமிடையில் கைகளை சரியான முறையில் ஓடும் நீரில் சவர்க்காரம் கொண்டு கழுவ வேண்டும்.
மொத்தமாக பணியில் உள்ள முடி திருத்துநர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாடிக்கையாளரை உள்ளே அனுமதிக்கவும். உதாரணமாக முடி திருத்துநர்கள் இருவர் பணியில் இருந்தால் முடி வெட்டிக் கொண்டிருப்பவர்கள் இருவரும் காத்திருப்பவர் இருவரும் என்று நான்கு வாடிக்கையாளர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்கவும். கடையின் அளவு சிறிதாயின் காத்திருக்கும் வாடிக்கையாளரின் எண்ணிக்கையை மேலும் குறையுங்கள்.
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பாவிக்கும் உபகரணங்கள் அனைத்தையும் 'ஸ்பிறிற்' மூலம் அல்லது கொதிக்கும் நீரில் அமிழ்த்தி தொற்று நீக்கம் செய்யவும். தொற்று நீக்கம் செய்ய முடியாத உபகரணங்களைப் பாவிப்பதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
போர்வை, துவாய், பிளேட் போன்றவற்றை வழமைபோல் ஒருவருக்கு ஒன்று எனப் பாவிக்கவும்.
பிளேட்டை ஒருவருக்குப் பாவித்த பின் எறியவும். துவாய்கள், போர்வைகளை தோய்த்து உலர்ந்த பின்பே பாவிக்கவும். இந்த அறிவுறுத்தல்களை தங்கள் மாவட்டத்தின் பிரதேச செயலர்கள் ஊடாக சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கும் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன், என்றுள்ளது. (ஒ,5)

# கட்டுப்பாடுகளை...

கொரோனா வைரஸ் தொற்று நோயை இல்லாதொழிப்பது மற்றும் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரச தனியார் துறைகளின் வருவாயைப் பலப்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவதன் காரணத்தால், கடந்த நான்கு வாரங்களாகப் பிறப்பிக்கப்பட்ட நாடளாவிய ரீதியிலான ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.
இந்த நிலையில் தமது பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவது நாட்டு மக்கள் அனைவரதும் கடமையாகும். சுகாதார அதிகாரிகள் மூலமாக அறிவுறுத்தப்படும் காரணிகள் மற்றும் அரசாங்கம் விதித்துள்ள கட்டுபாடுகளை முறையாகப் பின்பற்றி, எமக்குள்ள சவால்களை வெற்றி கொள்ள அனைவரதும் ஒத்துழைப்புகளையும் வழங்குமாறு நாட்டு மக்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன். என்றுள்ளது. (சு)

# யாழ்ப்பாணத்தவர்கள்...

வுள்ளனர். இந்தத் தகவலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
அரியாலையைச் சேர்ந்த நான்கு பேரே இவ்வாறு முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பும் அவர்களை வெலிகந்தையிலிருந்து அம்புலன்ஸில் அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
அவர்கள் வீடுகளுக்கு திரும்பினாலும் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு வீட்டிலேயே இருப்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ,5)

# மதுபான நிலையங்கள்....

திறக்க அனுமதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சின் செயலரின் அறிவுறுத்தல்கள் மற்றும் கொவிட் 19 நோயைத் தடுப்பதற்கான பிற பாதுகாப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகளுக்கு இணங்குவதற்கான நிபந்தனைகள் மற்றும் ஊரடங்கு உத்தரவு, சமூக கட்டுப்பாடுகள் உள்பட்டு மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
மேற்கண்ட நிபந்தனைகளுக்கு இணங்கத் தவறும் மதுவரி உரிமம் பெற்ற இடங்கள் தொடர்பாக தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கவும், மதுபானத் தொழில் தொடர்பாக அதிகபட்ச அளவிலான தொழில் ஒழுக்கத்தைப் பேணவும் அனைத்து மதுவரி அதிகாரிகளுக்கும் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

# நீதிமன்ற நடவடிக்கை நாளை ஆரம்பிக்கவும்

## நீதிச் சேவை ஆணைக்குழு வெளியிட்டது

யாழ்ப்பாணம், ஏப். 19
அனைத்து நீதிபதிகளுக்கும் தங்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை நாளை முதல் மீண்டும் தொடங்குமாறு நீதிச் சேவை ஆணைக்குழுவால் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. மேல் நீதிமன்றங்கள், குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதி மன்றங்கள், வணிக மேல் நீதி மன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளின் நடவடிக்கைகளை நாளை ஆரம்பிக்க இந்த சுற்றறிக்கையில் அறிவு றுத்தல் வழங்கப்பட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும் பகுதிகளில் நீதிமன்ற நடவடிக்கைகளை நாளை ஆரம்பிக்க இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ஒ,5)

# வீடுகளை விட்டு வெளியேறுவதை இயலுமானவரை தவிருங்கள்

## யாழ்ப்பாண மக்களிடம் சுகாதார திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 19
யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூக மட்டத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டவர்களை அடையாளங் காண்பதற்கான பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் சூழ்நிலையில் ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் அத்தியாவசியத் தேவைகளுக்காக வெளியே வருபவர்களைத் தவிர ஏனையவர்கள் இயலுமானவரை வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. மேலும் நாட்டில் கொரோனா அபாயம் முற்றாக நீங்கும் வரை ஏனைய மாவட்டங்களிலும் வெளியில் நடமாடுவதை இயன்றவரை குறைத்துக்கொள்ளுங்கள். மிகவும் அவசியமான தேவைகளற்று வெளியில் செல்வது, சிறு சிறு விடயங்களுக்காக பல தடவை வெளியில் செல்வது போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
சன நெருக்கமான இடங்கள், சன நெருக்கமான போக்குவரத்துச் சேவைகள் போன்றவற்றை இயன்ற வரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
தவிர்க்கமுடியாத இடத்து அத்தியாவசிய தேவை கருதி வெளியில் செல்வதாயின் கட்டாயமாக ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணவும்
பொதுப் போக்குவரத்து சேவையிலீடுபடும் வாகனங்கள் அனைத்திலும் அனுமதிக்கப்பட்டுள்ள பயணிகளின் எண்ணிக்கையில் அரைவாசிப் பேர் மட்டுமே பயணம் செய்ய வேண்டும்.
அனைத்து வாகனங்களையும் தினமும் கிருமித் தொற்று நீக்கத்துக்கு உட்படுத்தவும்.
அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், ஏனைய பொது மக்கள் அல்லது பணியாளர்கள் எனப் பலர் கூடக்கூடிய இடங்களில் பொருத்தமான, கைகழுவும் உரியவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அவற்றைக் கட்டாயமாக்கிக் கொள்ளவும். மேலும் தனிநபர்களுக்கிடையிலான சமூக இடைவெளியை பேணுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
ஒன்று கூடல்கள், கூட்டங்கள், சுற்றுலாக்கள், சமய நிகழ்வுகள், பொது வழிபாடுகள், கோயில் திருவிழாக்கள், விளையாட்டு நிகழ்வுகள், வீட்டு வைபவங்கள் போன்றவை மறு அறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டுள்ளன என்பதை அறிந்துகொள்ளுங்கள்.
நீண்ட நாள்களுக்குப் பின் ஊரடங்கு தளர்த்தப்படவுள்ளதால் சமூக இடைவெளியைப் பேணவும். வெளியில் சென்று, வீட்டுக்குத் திரும்பும் போதெல்லாம் நன்றாக குளித்தல் நல்லது. வீட்டில் உள்ளபோதும் அடிக்கடி கைகளை உரிய முறையில் கழுவுங்கள்.
உங்களுக்கு கொரோனா தொற்றுக்குரிய அறிகுறிகளாகிய தொண்டைநோ, வறட்டு இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏதும் ஏற்பட்டால் முகக் கவசம் அணிந்து கொண்டு உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனையை அணுகுங்கள், என்றுள்ளது. (ஒ,5)

# சத்திர சிகிச்சைகளை நிறுத்துமாறு கூறவில்லை

## பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

மருத்துவமனைகளில் வழமையாக நடத்தப்படும் சத்திர சிகிச்சைகளை நிறுத்துமாறு எவ்வித சுற்றறிக்கைகளும் வெளியிடப்படவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். சில கட்டுப்பாடுகளுடன் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும் என அறிக்கை ஒன்றினூடாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறினார். எனினும், ஒரு பகுதி ஊழியர்களை வீட்டிலிருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளதற்கு அமைய, நாளாந்தச் செயற்பாடுகள் குறைந்த ஊழியர்களுடனேயே முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

வழமையான சேவைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கான பணியாளர்கள் போதுமானளவு இல்லை எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். எனினும், வழமையாக முன்னெடுக்கப்படும் சத்திர சிகிச்சைகள் மற்றும் புற்றுநோயாளர்களுக்கான சத்திர சிகிச்சைகளை நிறுத்துமாறு அறிவிக்கப்படவில்லை என்றார்.

இதேவேளை, பிற்போடக்கூடிய சத்திர சிகிச்சைகள் தொடர்பில் தேவையான வழிமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)



# துர்நாற்றம் வீசும் கோழிக் கழிவுகள்

## நடவடிக்கை எடுக்கக்கோரி யாழ். மாநகர முதல்வருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்ப்பாண மாநகரசபைக்கு உட்பட்ட 13ஆம் வட்டாரம் (ஜே/87) முஸ்லிம் கல்லூரி வீதியில் உள்ள , வெற்றுக் காணியில் காணப்படும் கிணற்றில் சில வாரங்களாக கோழிக் கழிவுகள், பை ஒன்றினுள் கட்டப்பட்டு போடப்படுவதாகவும், அதனால் சுற்றுசூழலில் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவித்து யாழ் முஸ்லிம் இளைஞர் கழகத்தினால் மாநகர முதல்வருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அண்மையில் பெய்த மழையால் தற்பொழுது குறித்த கோழிக்கழிவுகள் போடப்பட்ட கிணற்றில் இருந்து துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அயலில் உள்ள குடியிருப்பாளர்கள் தமது வீடுகளில் வசிக்க முடியாது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பில் அப்பகுதி மக்கள் சமூகப் பொறுப்பு மிக்க கழகம் என்ற வகையில் எமது இளைஞர் கழகத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். இது தொடர்பில் ஆராய இன்றைய தினம் (நேற்று) கழக உறுப்பினர்கள் இணைந்து குறித்த பகுதிக்கு நேரடிக் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தோம். குறித்த விஜயத்தின் மூலம் கோழிக் கழிவுகள் அங்கு கொட்டப்பட்டுள்ளமையை உறுதி செய்ய முடிந்ததுடன் குறித்த பகுதியில் முழுமையாக துர்நாற்றம் வீசுவதனையும் உணர முடிந்தது.

இது தொடர்பில் மாநகரசபை பொதுச் சுகாதாரப் பொறியியற்பிரிவின் பொறுப்பதிகாரியின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளோம். இருப்பினும் இது தொடர்பில் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் மாநகர முதல்வராகிய தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டு வருவது எமது பொறுப்பு என்று கருதுகின்றோம். அந்த வகையில் குறித்த விடயம் தொடர்பில் துரித நடவடிக்கை மேற்கொண்டு அக் கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் சார்பில் தயவாகக் கேட்டுக் கொள்வதுடன், பொறுப்பற்று செயற்படுபவர்கள் தொடர்பில் உரிய கண்டிப்புடனும், உரிய வகையில் மாநகர கழிவு காவும் வண்டியில் கோழிக் கழிவுகளை சேர்ப்பிக்கப்படுவதை உரிய அதிகாரிகள் மூலம் உறுதிப்படுத்துமாறும் தங்களைத் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ப)

# ரயில் சிட்டைகளை விநியோகிக்க திட்டம்

கொழும்பு,ஏப்.19

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் ரயில் பயணிகளுக்கு பயணச் சீட்டுகளை விநியோகிக்கும் விசேட செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் ரயில் பயணிகள் கடைப்பிடிக்க வேண்டிய பல்வேறு விதி முறைகளும் அறிமுகப்படுத்தப்படும் என்று ரயில்வே பொது முகாமையாளர் டிலாந்த பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.(க)

# தபால் திணைக்களத்தினூடாக சதொச பொருள் விநியோகம்

கொழும்பு, ஏப்.19

சதொச நிறுவனங்களிலிருந்து வீடுகளுக்கு பொருள்களை தபால் திணைக்களத்தின் ஊடாக விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக ஹோமாகம, ஹெவ்லொக் டவுன், கடவத்தை மற்றும் மொரட்டுவ ஆகிய பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஆரம்பகட்டச் செயற்றிட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில், ஏனைய மாவட்டங்களில் இதனை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# றோட்டறிக் கழகத்தால் 100 முகக்கவசங்கள்

கிளிநொச்சி, ஏப்.19

கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தினர் 100 முகக்கவசங்களை, கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் நேற்றுக் காலை கையளித்துள்ளனர்.

கொவிட் 19 கொரோனா பேரிடர் காலத்தில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதாரப் பணியாளர்களின் தேவை கருதி ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 முகக்கவசங்கள் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது. கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் சார்பில் அதன் தலைவர் அ. பங்கையற்செல்வன் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவனிடம் கையளித்தார்.

நிகழ்வில் பிராந்திய தொற்று நோயியல் தடுப்பு, புள்ளிவிபரவியல் பொறுப்பு அதிகாரி மருத்துவர் நிமால், மாவட்ட வைத்தியசாலை நினைவழி மருத்துவ நிபுணர் மருத்துவர் நாகேஸ்வரன், பிராந்திய மலேரியா தடுப்பு பொறுப்பு அதிகாரி மருத்துவர் ஜெயராஜா, கணக்காளர் திவ்யரூபன் றோட்டறிக் கழகத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-214)




# சட்டவிரோத மது பாவனை ஊரடங்கு நேரம் அமோகம்

கொழும்பு, ஏப். 19

ஊரடங்கு நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துள்ளதாக கலால் வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நாள் தொடக்கம் கடந்த 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் அவ்வாறான 100 இடங்கள் சுற்றிவளைக்கப்பட்டிருந்தன என்று கலால்வரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

இதன்போது, 400க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. . 10 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்படுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (த)

# 'கிளினிக்'கை உடைத்து எல்.ஈ.டி. ரிவி திருட்டு

மட்டக்களப்பு, ஏப்.19

குடும்ப நல உத்தியோகத்தரின் கிளினிக் நிலையத்தை உடைத்து அதிலிருந்த பெறுமதியான எல்.ஈ.டி தொலைக்காட்சிப் பெட்டி திருடப்பட்டுள்ள சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் கீழ் இயங்கும் மீராவோடை பகுதியில இடம்பெற்றுளது. கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் கிளினிக்குக்கு வரும் குழந்தைகளுக்கு சுகாதாரப் பழக்கவழக்கங்கள் தொடர்பான ஒளிப்பதிவுக் காட்சிகளை காண்பிப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டியே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-150)

# ஆய்வறிவு சார்ந்த அடிப்படையில் கொரோனா பி.சி.ஆர். பரிசோதனை

## சுகாதாரத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 19

கொரோனா தொற்றுக்கான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுவது ஆய்வறிவு சார்ந்த அடிப்படையில் மாத்திரமே என்று சுகாதார மற்றும் சுதேசிய வைத்திய சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. இது பற்றி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளதாவது:



மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு 5 அல்லது 6 மணித்தியாலங்கள் தேவை. இதற்காக எடுக்கும் கால எல்லை , ஈடுபட வேண்டிய பணியாளர்கள் செலவு தொடர்பிலும் கவனத்தில் கொள்ள வேண்டும். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நோய் அறிகுறிகள் காணப்படுவோர், தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் உள்ள நபர்கள் மற்றும் நோய் காணப்படுவதாகச் சந்தேகத்துக்குரிய பெரும்பாலான நபர்களுக்காகவே இதுவரையில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய நபர்கள் யார் என்பது பற்றி சுகாதாரப் பிரிவு மற்றும் உரிய அதிகாரிகளே தீர்மானிப்பார்கள். இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை முன்வைப்பது அவசியமற்றது. இதுவரையில் நாடு முழுவதிலும் 13 ஆய்வுகூடங்களில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. 18ஆம் திகதி (நேற்று) தொடக்கம் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையிலும் இந்த பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (த)



# படையினரால் போதனாவுக்கு வாகனத் தரிப்பிடம்

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்.வைத்தியசாலைக்கு இராணுவத்தினரால் வாகனத் தரிப்பிடம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தியால் யாழ்ப்பாண பாதுகாப்பு படை கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரால் ருவன் வணிகசூரியவுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமையவே இந்த தரிப்பிடம் அமைக்கப்பட்டது என்று படைத்தரப்பு தெரிவித்தது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக வருகின்ற நோயாளிகள் மற்றும் வைத்தியசாலை வளாகத்தினருக்கான வாகனங்கள் நிறுத்துவதற்காக, பாதுகாப்புப் படைத் தலைமையகம் யாழ்ப்பாணத்தின் கீழ் சேவையாற்றி வருகின்ற 5ஆவது பொறியியலாளர் சேவை படையணியின் படை வீரர்களினால் இந்த வாகனத் தரிப்பிடம் அமைக்கப்பட்டு, கடந்த வெள்ளிக்கிழமை வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது. வாகனத் தரிப்பிடத்தை அமைப்பதற்குரிய அனைத்துப் பொருள்களும் யாழ்.போதனா வைத்தியசாலை மூலம் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# செஞ்சிலுவைச் சங்கத்தின் தொற்று நீக்கும் நடவடிக்கை

கிளிநொச்சி, ஏப்.19

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால், கிளிநொச்சியில் இன்று விசேட சுத்திகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில், கிளிநொச்சி பொலிஸ் நிலையம் மற்றும் இரணைமடுவில் அமைந்துள்ள பொலிஸ் உயர் நிலை அலுவலகங்களிலும், குறித்த தொற்று நீக்கும் செயற்பாடுகள் இன்று முன்னெடுக்கப்பட்டன. பொதுமக்கள் அதிகளவில் பொலிஸ் உதவியை நாடுகின்ற நிலையில், குறித்த தொற்று நீக்கல் செயற்பாடுகள் இன்று முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-214)





# குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இளைஞர் துறையினரின் ஏற்பாட்டில், இரத்ததான முகாம் கடந்த சனிக்கிழமை யாழ் வைத்தியசாலை இரத்த வங்கியில் இடம்பெற்றது.

சமூக இடைவெளியினை பேணும் வகையில் ஒரு தினத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான குருதிக் கொடையாளர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியும் என்பதன் அடிப்படையில், தொடர்ச்சியாக எதிர்வரும் திங்கள், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களும் குருதிக் கொடை முகாம் நடைபெறுமென யாழ். இந்து இளைஞர் துறையினர் தெரிவித்துள்ளனர்.

குருதிக் கொடை வழங்க விரும்பும் யாழ் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் தன்னார்வமுடைய குருதிக் கொடையாளர்கள் 0775127096/0767922193 ஆகிய அலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு தங்கள் வரவினை உறுதிப்படுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.(ந-222)

# வேகமாக சென்ற 'படி' விபத்தில் சிக்கியது

யாழ்ப்பாணம் , ஏப் 19

வேகமாகப் பயணித்த விற்பனை நிறுவனத்துக்குச் சொந்தமான படி ரக வாகனம் ஒன்று வீதியோரம் இருந்த வர்த்தக நிலையத்தின் பெயர்ப் பலகையில் மோதுண்டு எதிர்த் திசையில் இருந்த வீதிச் சமிக்ஞை கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்றது.

பலாலி வீதியில், திருநெல்வேலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த படி ரக வாகனமே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது. இதன்போது வேகமாகப் பயணித்த வாகனம் வீதியின் வளைவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்தது. பெயர்ப் பலகையில் மோதியதால், பெயர்ப் பலகை மற்றும் வர்த்தக நிலைய




சூரிய ஒளித்தடுப்பு என்பன சேதமடைந்தன. எனினும் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு எந்தப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ப-105)

# பிற்பகல் மழைக்கு சாத்தியம்

கொழும்பு,ஏப்.19

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென்,ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் பல இடங்களில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 2030 கிலோ மீற்றர் வரை காணப்படும். நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் அவ்வப்போது சாதாரண முதல் மிதமான கொந்தளிப்பாகக் காணப்படும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (க)



# அரச அலுவலகங்களில் கிருமி நீக்கிகள் விசிறல்

முல்லைத்தீவு,ஏப்.19

நாட்டில் உள்ள அரச அலுவலகங்கள் நாளை இயங்கவுள்ள நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களில் தொற்று நீக்கி மருந்துகள் விசிறும் நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்பட்டன.

மாங்குளம் பகுதியில் உள்ள அரச அலுவலகங்கள் சிலவற்றின் அழைப்பைத் தொடர்ந்து, கிருமி நீக்கி மருந்து விசிறல் நடவடிக்கை பிராந்திய சுகாதாரப் பணிமனையினரால் முன்னெடுக்கப்பட்டன.

கிருமி நீக்கி மருந்து விசிறும் தேவைகளுக்கு அரச நிறுவனங்களின் தலைவர்கள் அழைப்பு மையத்தை (02120 60007) தொடர்பு கொண்டால், மேலதிக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிமனையினர் தெரிவித்தனர். (க-19)

# தள்ளி வீழ்த்தியதில் கிராம அலுவலர் காயம்

மட்டக்களப்பு, ஏப்.19

ஓட்டமாவடிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவர் ஒருவர் தாக்கப்பட்டு, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் காகிதநகர் கிராம சேவகர் பிரிவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது,

ஏப்ரல் மாதத்துக்கான சமுர்த்திக் கொடுப்பனவும், அதனுடன் இணைந்த உலர் உணவுப் பொதிகளும் காகிதநகர் கிராம அலுவலர் அலுவலகத்தில் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் காகிதநகர் கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உதவிகளை வழங்கும் சமயத்தில் அவ்விடத்தில் நின்ற நபர் ஒருவர் அங்கு நின்ற மக்களை ஒளிப்படம் எடுத்துள்ளார். இது தொடர்பில் கிராம அலுவருக்கு மக்கள் முறையிட்டுள்ள னர்.

இதன் பிரகாரம் வெள்ளிக்கிழமை மாலை கிராம அலுவலர் காவத்தமுனையைச் சேர்ந்த குறித்த நபரை ஒளிப்படம் எடுக்க வேண்டாம் என்று கூறியுள்ளார். இதன் போது குறித்த நபர் கிராம அலுவரைத் தள்ளிவீழ்த்தியதில் அவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-150)

# நாடாளுமன்றை உடன் கூட்டுங்கள்

## கோத்தாபயவிடம் சஜித் கோரிக்கை

கொழும்பு,ஏப்.19



கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக எமது நாடும் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கும் நிலையில், அது குறித்தும் நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்றை உரிய காலத்துக்குள் நடத்த முடியும் என்று எதிர்பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை தொடர்வதால், காலம் கடத்தாமல் நாடாளுமன்றத்தைக் கூட்டி அனைவரும் ஒன்றிணைந்து ஒரு முடிவு எடுப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுத் தர வேண்டும்.

நாடாளுமன்றத்தைக் கூட்டும் பட்சத்தில் அங்கு ஏற்படக்கூடிய செலவினங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய கொடுப்பனவுகள், சம்பளம், உணவு மற்றும் இதர செலவுகள் அனைத்தையும் தியாகம் செய்யவும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராக இருக்கின்றார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் இன்னமும் சரியான ஒரு தீர்க்கமான முடிவை எட்ட முடியாத நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழு இருப்பதாக நாம் அறிந்துள்ளோம். இவ்வாறான சூழ்நிலையில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டு மூன்று மாதங்கள் கடக்கும் காலம் மிக அண்மித்து விட்டது. அதன் பின்னர் எந்த வகையில் தேர்தலை நடத்துவது என்பது குறித்து நாங்கள் சிந்திக்க வேண்டியுள்ளது. சில வேளை தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரின் கருத்துப்படி ஜூலை மாதம் வரை தேர்தலை நடத்த முடியுமா? என்ற அச்சம் காணப்படுவதாக அறிந்துள்ளோம்.

இந்த நிலையில் நாடாளுமன்ற ஜனநாயகம் கேள்விக்குறியாகும் ஒரு நிலைமை உருவாவது தவிர்க்க முடியாததாகும். இதனை ஆரோக்கியமானதாக எம்மால் கருத முடியாது. எனவே தான் இம்மாத இறுதிக்குள் அல்லது மே மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டி, இந்த நெருக்கடி நிலைகள் தொடர்பாக விவாதித்து அல்லது கலந்துரையாடி ஆரோக்கியமான முடிவை எடுப்பதற்கு ஒரு வாய்ப்பை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

எனவே, உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டி அதற்கான வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறு தங்களிடம் அனைத்துக் கட்சிகள் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றார். (க-22)

# தென்மராட்சியில் மூவர் கைதாகி விடுதலை

கொடிகாமம் ஏப்,19

உணவுப் பொருள்கள் கொண்டு சென்ற தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையத்தின் உறுப்பினர்கள் மூவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நடைமுறையில் இருக்கும் ஊரடங்கால் நாளாந்த தொழிலை இழந்து வருமானமின்றி மிகவும் வறுமையில் உள்ள கச்சாய் பாலாவி கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கு கடந்த வியாழக்கிழமை உலர் உணவுப் பொருள்கள் வழங்கச் சென்ற வேளையே அவர்கள் கைது செய்யப்பட்டனர். அதன் பின்னர் விசாரணைகளை அடுத்து மூவரும் விடுவிக்கப்பட்டனர். (ஐ-159)

# வடமராட்சியில் தொற்று நீக்கல்

வடமராட்சி,ஏப்.19

வடமராட்சியில் பொது இடங்கள் மற்றும் அரச அலுவலகங்களில் தொற்று நீக்கும் செயற்பாடுகள் இன்று முன்னெடுக்கப்பட்டன.

வடராட்சி கிழக்குப் பிரதேச செயலகம், மருதங்கேணி பொலிஸ் நிலையம், இராணுவச்சாவடி, பஸ்தரிப்பிடங்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உள்ளிட்ட இடங்களில் தொற்று நீக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. பருத்தித்துறைப் பிரதேச சபையினரின் ஏற்பாட்டில் தொற்று நீக்கும் மருந்துகள் விசிறப்பட்டன. (க-173)

# கேப்பாப்பிலவில் இதுவரை 258 பேர் தனிமைப்படுத்தல்

முல்லைத்தீவு,ஏப்.19

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள கேப்பாப்பிலவு விமானப் படைத் தளத்தில் உள்ள தனிமைப் படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில், இதுவரை 258 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு,கொழும்பு போன்ற இடங்களின் புறநகர்பகுதிகளில் இருந்த அனாதரவானவர்கள், யாசகம் பெற்றோர் என பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் நேற்று பகல் இரவு இன்று அதிகாலை வரை மூன்று கட்டங்களாக பஸ்களில் அழைத்து வரப்பட்டனர்.

258 பேர் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-19)



# வெளிநாடுகளில் சிக்கிய 215 மாணவர்கள் மீட்பு

கொழும்பு,ஏப்.19

கொரோனாத் தொற்றால் வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கை மாணவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் வேலைத்திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 215 மாணவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து மாணவர்கள் அழைத்து வரப்படுவர் என்று விமான சேவை நிறுவனத்தின் நடவடிக்கைப் பணிப்பாளர் செஹான் சுமணசேகர தெரிவித்துள்ளார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைவாக, இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முதலில் சார்க் வலய நாடுகளில் கல்வி கற்கும் மாணவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-114)

# நாட்டு வைத்தியத்துக்கான பொருளை தர மறுக்கும் மன்னார் வர்த்தகர்கள்

## நாட்டு வைத்தியர்கள் குற்றச்சாட்டு

மன்னார், ஏப்.19

மன்னாரில் நாட்டு வைத்தியத்துக் குரிய பொருள்கள் இருந்தும் விற்பனை செய்ய கடைக்காரார்கள் மறுத்து வருகின்றனர் என்று நாட்டு வைத்தியர்கள் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளனர்.

ஊரடங்குச் சட்டத்தின் காரண மாக போக்குவரத்து மட்டுப்படுத் தப்பட்டுள்ளது. இதனால் எலும்பு உடைவு, முறிவு, வீக்கங்கள் போன்ற நோய்களுக்கு அருகில் உள்ள நாட்டு வைத்தியர்களிடம் பெரும்பாலான மக்கள் செல்கின் றார்கள். ஆனால் நாட்டு வைத்தி யர்களிடம் மருத்துவப் பொருள்க ளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கரிய பவளம், வாய்வளங்கம், வேர் கொம்பு, மஞ்சள், பெருங்காயம் போன்ற பொருள்களை கடைக ளுக்குச் சென்று கேட்கும் போது வர்த்தகர்கள் அவற்றை விற்பனை செய்ய மறுத்து வருகின்றனர் என்று நாட்டு வைத்தியர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

வர்த்தகர்கள் அந்தப் பொருள்களை வைத்துக் கொண்டு இல்லை என்று சொல்வதால் மக்கள் தான் பெரி தும் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ப -213)

# சந்தேகநபர் மூவர் கைது

கிளிநொச்சி,ஏப்.19

ஹெரோயின் மற்றும் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச் சாட்டில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்ட மது ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

நாட்டில் ஊரடங்கு நடைமு றையில் இருக்கும் நேரத்தில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கனகபுரம் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத் திருந்த இருவரும், ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த ஒருவ ரும் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணையின் பின்னர் மூவரும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக கிளி நொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (க-6)



# 50 பேருக்கு கொரோனா

களுத்துறை,ஏப்.19

களுத்துறை மாவட்டத்தில் நேற்று வரை 50 கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று களுத்துறை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தி யர் உதய ரத்னாயக்க தெரிவித் துள்ளார்.

அத்துடன் 14 பேர் பூரண குண மடைந்து வீடுகளுக்குத் திரும்பி யுள்ளனர். உயிரிழப்புகள் எது வும் பதிவாகவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-114)

### உலருணவுப் பொருள்களுக்காக

# ஒரு மாத சம்பளத்தை வழங்கிய சுயேச்சைக் குழு உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.19

நாட்டில் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசால் நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக தங்களின் நாளாந்த உணவுத் தேவையை பூர்த்தி செய்துகொள்வதில் கடும் நெருக்க டிகளை சந்தித்துள்ள மக்களுக்கு உலருணவுப் பொருள்களை வழங்கு வதற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் போட் டியிட்டு வென்ற சுயேச்சைக் குழு வின் 19 உறுப்பினர்கள் தங்களது ஒருமாதச் சம்பளத்தை வழங்கியுள்ள னர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக் கப்பட்டதாவது:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் மு. சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி கரைச்சி, பளை, பூநகரி பிரதேச சபையின் சுயேட்சைக்குழு 19 உறுப்பினர்க ளும் தங்களின் ஒருமாதக் கொடுப்பனவை கட்சியின் இடர் முகாமைத்துவக் குழுவிடம் வழங் கியுள்ளனர். அத்தோடு கட்சியின் அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலர் பொருள்களாக வும், நிதியாகவும் கட்சியின் இடர் முகாமைத்துவ குழுவிடம் மன முவந்து வழங்கியுள்ளனர்.

இதனைக் கொண்டு உலருணவுப் பொருள்கள் மற்றும் மரக்கறிகள் என்பன கொள்வனவு செய்யப் பட்டு நாளாந்த உழைப்பில் வாழ்ந்து வந்து தற்போது ஊரடங்குச் சட்டம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு கட்சியின் பிர தேச சபை உறுப்பினர்கள் உள் ளிட்ட தொண்டர்கள் நேரடியா கச் சென்று வழங்கி வருகின்றனர். ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போதும் மாவட்டச் செயலகம் பொலிஸ் தரப்பின் விசேட அனு மதி பெற்று சமத்துவக் கட்சியினர் இந்தப்பணியை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ப-50)

# பளையில் ஐவர் கைது

கிளிநொச்சி,ஏப்.19

ஊரடங்கு நேரத்தில் வீதியில் நடமாடிய 5 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று பளை பொலிஸ் நிலையத்தினர் தெரி வித்தனர்.

பளை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் ஊரடங்கு நேரத்தில், வீதிகளில் சுற்றி திரிந்த ஐவரும் கைது செய்யப் பட்டனர்.

மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பளை பொலிஸ் நிலை யத்தினர் தெரிவித்தனர். (க-6)

# சமுர்த்தி அலுவலரை தாக்கினரென நால்வருக்கு மறியல்

மாத்தளை, ஏப்.19

தென்பகுதி ரத்தோட்டை பகுதியில் சமுர்த்தி அதிகாரியைத் தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப் பட்ட நால்வரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரண மாக சமுர்த்தி அதிகாரி நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டிருந்தபோதே, அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

பாதிக்கப்பட்ட அலுவலர் ரத் தோட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். சந்தேகநபர் கள் மாத்தளை நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர். (த-114)

# சில ஜோதிடர்களின் கருத்துகளால் தவறாக வழிநடத்தப்படும் மக்கள்

## புத்தசாசனம் அமைச்சு குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.19

தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்களில் ஜோதிட சாஸ்திரம் தொடர்பாக பலர் கருத்துக்க ளைத் தெரிவித்து வருகின்றனர். இவ்வாறு இராசி பலன்களைத் தெரிவிப்போரில் சிலர் ஜோதிட சாஸ்தி ரத்தின் அடிப்படைகளான தர்க்க ரீதியான விடயங்களைக் கருத்தில் கொள்ளாது, மக்களுக்குப் பிழையான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறு புத்தசாசனம் கலாசாரம் மற்றும் மத அலு வல்கள் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போதய சூழலில் , மக்கள் கூடுதலாக தொலைக் காட்சி, வானொலி போன்ற ஊடகங்களை நாடுவ தைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்த நிலையில் நாட்டினதும், மக்களினதும் எதிர்கால நிலைமை தொடர்பாக மக்கள் எதிர்பார்ப்புடன் இருக்கும் இவ்வேளையில், மேற்குறிப்பிட்டது போல் இராசிப லன்களை பிழையான முறையில் தெரிவித்து வருவது, ஜோதிட சாஸ்திரம் மூலம் மக்களைத் தவறாக வழி நடத்துதலுக்கு வழிசமைக்கும்.

எனவே தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊட கங்கள் இந்த விடயத்தில் பொறுப்புடன் செயற்படு தல் வேண்டும். யோகங்களின் பின்னணி மற்றும் இயற்பெயரையும் தோஷங்களின் பின்னணியையும் முறையாகப் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். இந்த விடயம் தொடர்பாக ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் 0777 315206 , 0714 450756 , 0727 315206 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்க லாம். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளருடன் 0714471128 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்- என் றுள்ளது. (க)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 19.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.